அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் வழங்கப்படும்

# விருதுகளுக்கு தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை, ஜுலை 26 -

பழனி, அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் 15 முருகனடியார்களின் பெயரில் வழங்கப்படும் விருதுகளுக்கு தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றியவர்களுக்கு 15 முருகனடியார்களின் பெயரில் வழங்கப்படும் விருதுகளுக்கு தகுதி வாய்ந்த நபர்கள் விண்ணப்பிக்கலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழுக் கூட்ட முடிவுகளின்படி 2024 ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடைபெறுகின்றது. இம்மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து முருக பக்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். இரண்டு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் ஆய்வரங்கம், அறுபடை வீடுகளின் அரங்குகள், புகைப்படக் கண்காட்சி, கருத்தரங்கம், இசை நிகழ்ச்சி மற்றும் கலை நிகழ்ச்சிகள் 3D தொழில்நுட்பத்துடன் கூடிய காட்சி அரங்கம் போன்ற அம்சங்கள் இடம்பெறுகின்றன.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் நிறைவு நாளில் தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய அடியார்கள், சமயப்பணி புரிந்தோர், சமய சொற்பொழிவாளர்கள், அதிகளவில் திருப்பணி மேற்கொண்டோர், ஆன்மிக மற்றும் இலக்கிய படைப்பாளர்களை சிறப்பிக்கும் வகையில் முருகனடியார்களான நக்கீரர், போகர், அருணகிரிநாதர், குமரகுருபரர், பாம்பன் சுவாமிகள், வாரியார், தேனூர் வரகவி சொக்கலிங்கனார், கச்சியப்பர், பகழிக்கூத்தர், சிதம்பர சுவாமிகள், அண்ணாமலை ரெட்டியார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், முருகம்மையார், மாம்பழ கவிராயர், பாலதேவராயர் ஆகிய 15 முருகனடியார்களின் பெயரில் விருதுகள் வழங்கி சிறப்பு செய்யப்பட உள்ளது.

முருகனடியார்களின் பெயரிலான விருதுகளை பெறுவதற்கு திருப்பணி, சொற்பொழிவு, இலக்கிய, சமூக, கொடையாளர் மற்றும் அடியார்களுக்கான சேவை புரிந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்களை இந்து சமய அறநிலையத்துறையின் இணையதளமான *www.hrce.tn.gov.in* என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம். தகுதியுடையோர் பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் தங்களின் ஆன்மிக ஈடுபாட்டை உறுதிப்படுத்தும் சான்றாக தங்கள் பகுதியிலுள்ள சமய பெரியோர்கள் (ஆதீனங்கள், ஜீயர்கள்) அல்லது திருக்கோயில் செயல் அலுவலரிடம் சான்று பெற்று இணைத்து வரும் 5.8.2024 க்குள் *mmmviruthupalani2024@gmail.com* என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்திட வேண்டும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில், போக்குவரத்துத்துறையின் சார்பில், BS VI – 13 புதிய அரசு பேருந்துகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 24.07.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்து, பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் , புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி. பா.ஐஸ்வர்யா, மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மேலாண் இயக்குநர் (கு.அ.போ.க.) (கும்பகோணம் கே.எஸ்.மகேந்திரகுமார், பொதுமேலாளர் (கு.அ.போ.க.) (புதுக்கோட்டை மண்டலம்) இரா.இளங்கோவன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

பெண்களுக்கான அடிப்படை

# சுகாதாரத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும்!

## மாநிலங்களவையில் - டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஜுலை 26 -

கல்வி நிலையங்களிலும் பணி இடங்களிலும் கழிப்பிட வசதியின்றி தவிக்கும் பெண்கள் தொடர்பாக ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களவையில் புதன்கிழமையன்று டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு சிறப்பு கவன ஈர்ப்பின் மூலம் பேசியதாவது :-

இந்தியாவில் உள்ள கல்வி நிலையங்களில் பயிலும் மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு பணி இடங்களில் உரிய கழிப்பறை வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் இல்லை என்ற உண்மையை மிகுந்த மன வேதனைக்கு இடையே இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் பெண்களுக்கான வாய்ப்பு அதிகரிக்கும் இந்த நேரத்தில் அந்த இடங்களில் அவர்களுக்கு போதிய அடிப்படை வசதிகள் இல்லாதது துரதிஷ்டவசமானது.

பள்ளிகள் தொடங்கி கல்லூரிகள் வரை வங்கிகள் தொடங்கி பொதுத்துறை அலுவலகங்கள் வரை தினசரி சென்று வரும் லட்சக்கணக்கான மாணவிகள் மற்றும் பெண்கள் பல மணி நேரங்களுக்கு இயற்கை உபாதைகளை கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டிய அவலநிலைதான் இன்றைக்கும் இருக்கிறது.

அமைப்புசாரா தொழிலாளர்களிலும் பெண்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும் சூழலில் தனியார் நிறுவனங்களும் கூட குறைந்த பட்ச கழிப்பிட, சுகாதார வசதிகளை செய்து தர மறுக்கின்றன. இது பெண்களின் உடல்நிலையை பாதிப்பது மட்டுமல்ல... அவர்களின் சுயமரியாதையையும் கண்ணியத்தையும் பாதிக்கிறது என்பதை இந்த அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். அதுமட்டுமல்ல... இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் பெண்கள், வேலைக்குச் செல்லவே தயங்கும் நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதையும் இந்த அரசு கவனிக்க வேண்டும்.

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடு என்று இந்த அரசு பெருமைப்படும் நேரத்தில், இந்த அவலநிலை முட்டாள்தனமானது மட்டுமல்ல... அவமானகரமானதும் கூட.

எனவே எல்லா வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்னையை ஈடுபாட்டோடு அணுகி, கல்வி நிலையங்களிலும், பணி இடங்களிலும் பெண்களுக்கான அடிப்படை சுகாதாரத் தேவைகளை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றித் தர வேண்டும். அதன் மூலம் பாலினச் சமத்துவத்தையும் நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.

# கிராமப்புற பெண் தொழில் முனைவோர் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா?

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!



புதுடெல்லி, ஜுலை 26 -

“கடந்த ஐந்து ஆண்டுகளில் கிராமப்புறங்களில் பெண் தொழில்முனைவோர்கள் குறித்த எந்த விபரங்களையும் ஒன்றிய அரசு சேகரிக்கவில்லை.” என தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு :-

“இந்த நாட்டில் கிராமப்புறங்களில் பெண் தொழில் முனைவோரின் பங்களிப்பு மிகவும் குறைவாக உள்ளது என்பது உண்மையா? என்றும் கிராமப்புறங்களில் பெண் தொழில்முனைவோர் சதவீதம் குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏதேனும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளதா? அப்படியானால் மாநில வாரியாக அதுகுறித்த விபரங்களைத் தெரிவிக்க முடியுமா?” என்றும் “கிராமப்புறங்களில் பெண் தொழில்முனைவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒன்றிய அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது?” என்று தி.மு.க நாடாளுமன்ற எம்.எம்.அப்துல்லா மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை இணையமைச்சர் (கூடுதல் பொறுப்பு) ராவ் இந்திரஜித் சிங் “கடந்த ஐந்து ஆண்டுகளில் கிராமப்புறங்களில் பெண் தொழில் முனைவோரின் எண்ணிக்கை குறித்த எந்த விபரங்களையும் ஒன்றிய அரசு சேகரிக்கவில்லை. அதாவது, புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (NSSO), இந்தியாவில் வேலை வாய்ப்பு மற்றும் வேலையின்மை நிலையை அளவிட 2017 முதல் காலமுறை தொழிலாளர் படை கணக்கெடுப்பை (PLFS) நடத்தி வருகிறது. அதன்படி கிராமப்புறங்களில் பெண் தொழில்முனைவோரின் புள்ளி விபரங்கள் இதுவரை மதிப்பிடப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும் பணிக்குச் செல்லும் பெண்கள் குறித்து தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் எடுத்த கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் சுயதொழில் செய்யும் பெண்கள் 40 சதவிகிதம் உள்ளனர் எனவும், மாத ஊதியத்திற்குச் செல்லும் பெண்கள் 14 சதவிகிதம் உள்ளனர் எனவும், கூலி வேலைக்குச் செல்லும் பெண்கள் 46 சதவிகிதம் உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் - போக்குவரத்துத்துறையில்

# நீண்டகாலம் தேக்கமாக இருந்த அனைத்து பணிகளும் சீரமைப்பு!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!



புதுக்கோட்டை ஜுலை 26 -

ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பண பலன்கள் இல்லாமல் போனதை தமிழ்நாடு முதலமைச்சராக மு க ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு 1800 கோடி ரூபாய் நிதி வழங்கினார்கள். தற்போது நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக பண பலன்கள் வழங்காமல் இருக்கின்றது. விரைவில் முதலமைச்சர் இதற்கு நிதி வழங்குவார் பின்னர் அது வழங்கப்படும்.

பன்னிரண்டாவது ஊதியக்குழு பேச்சுவார்த்தையை மூன்றாண்டுக்குள் அதிமுக முடிக்காமல் போனதால் தி.மு.க. ஆட்சி அமைந்த உடன் தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி அந்த பேச்சுவார்த்தை நடத்தி முடிக்கப்பட்டது.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் சீர்குலைக்கப்பட்டிருந்த சம்பள விகிதம் மீண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் பேமெட்ரிக்ஸ் முறையில் வழங்கி ஊதிய உயர்வை வழங்கியுள்ளோம். தற்போது தான் பேச்சுவார்த்தை முடிந்து ஒரு ஆண்டு காலம் ஆகிறது. விரைவில் அடுத்த பேச்சுவார்த்தை தொடங்க நடவடிக்கை எடுத்து அதற்கான குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் பேச்சுவார்த்தை தொடங்குவோம்.

ஒரிசா மாநிலத்தில் நானூறு பேருந்துகள் தான் இயக்கப்படுகிறது. அதில் இருக்கிறவர்கள் அனைவருமே தனியார் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்கள் தான். நாம் அவ்வாறு செய்யவில்லை. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு 685 பேர் பணிக்கு எடுக்கப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

அதற்கு முன்பாக வேலைவாய்ப்பு நடவடிக்கைகள் தொடங்கி முடிவடைகிற வரை இடைக்காலத்தில் பேருந்துகள் நின்று விடாமல் இருக்க அவுட்சோர்சிங் முறையில் ஓட்டுனர் நடத்துனர்களை எடுத்தோம். அதிக ஓட்டுனர்கள் நடத்துனர்கள் ஓய்வு பெறுகிறார்கள். அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் 58 வயதை 60 ஆக்கிய காரணத்தினால் தொடர்ந்து ஓய்வு பெறுகிறார்கள்.

**வேலைக்கு ஆட்கள் எடுக்கும் பணி!**

அந்த இடத்தை நிரப்புவதற்கு இடைக்காலத்திற்கு அவுட்டோர்சிங் பயன்படுத்தப்படுகிறது. கடந்த கோடை விடுமுறையின் போது அரசு விரைவு போக்குவரத்தில் எந்த சங்கடமும் இல்லாமல் இயங்கியது. கடந்தாண்டை விட இந்த ஆண்டு கூடுதல் வருமானமும் வந்தது. தற்போது 685 பேர் பணிக்கு புதிதாக வேலைக்கு எடுக்கப்பட்டு பணிக்கு வந்த பிறகு அவுட்சோசிங் முறையில் நியமிக்கப்பட்ட வர்கள் விளக்கப்பட்டார்கள். அதே போல் தான் மற்ற போக்குவரத்து கழகத்திலும் வேலைக்கு ஆட்கள் எடுக்கும் பணி தொடங்கியுள்ளது. செப்டம்பர் அக்டோபர் மாதத்தில் அந்த பணிக்கான ஆள் எடுக்கும் நடவடிக்கை நடைபெறும். அதுவரை இந்த அவுட்சோர்சிங் முறை பயன்படுத்தப்படும்.

பல மாநிலங்களில் பென்சனே கிடையாது. தமிழ்நாட்டில் தான் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் பென்சன் கொடுத்தார். சில மாநிலங்களில் தான் டி ஏவே இருக்கிறது. அதையும் தற்போது நிறுத்திவிட்டார்கள். தற்போது தற்காலிக பணியாளர்களைத்தான் மற்ற மாநிலங்களில் எடுத்து வருகிறார்கள். நிரந்தரப் பணியாளர்களே இல்லை. தமிழ்நாட்டில் தான் நிரந்தர பணியாளர்கள் இருக்கின்றனர்.

பென்ஷன் கொடுத்தவரும் கலைஞர் அவர்கள் தான். டீஏ கொடுத்தவரும் கலைஞர் தான். பென்ஷன் டி ஏ வை நிறுத்தியவர்கள் அதிமுக எடப்பாடி ஆட்சி. அவர்களே நிறுத்தி விட்டுப் போனதை தற்போது அவர்களே கொடுக்க வேண்டும் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். இடைப்பட்ட காலத்திற்கு மொத்தமாக கொடுக்க வேண்டுமா இல்லையா என்பதை நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்தினால் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. பென்ஷன் டீஏ வழங்க வேண்டும் என்பதில் தமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க கூறியுள்ளார்.

**மினி பேருந்துகள் மக்கள் கருத்துக் கேட்பு!**

சென்னையில் மினி பேருந்துகள் தொடங்குவது குறித்து கருத்து கேட்பு கூட்டம் உள்துறை செயலாளர் தலைமையில் நடைபெற்றது. பல்வேறு சங்கத்தினர் அதில் கலந்து கொண்டனர். இந்த நடவடிக்கையை திராவிட மாடல் முதல்வர் ஆரம்பித்து சட்டமன்றத்திலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கருத்து கேட்பு அடிப்படையில் சில மாற்றங்கள் செய்து முதலமைச்சரின் ஒப்புதல் பெறப்பெற்று புதிய கொள்கை அறிவிக்கப்பட்டு புதிய வழித்தடங்களும் வரும். அதேபோல் மினி பேருந்துகள் ஓட்டுகின்ற ஓட்டுநர்களின் கோரிக்கையும் ஏற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சியில் ஏற்கனவே எட்டு கோட்டங்கள் உள்ளது அதில் நிர்வாக சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கோரப்பட்டது. ஆனால் நம்மைப் பொறுத்தவரை மக்களுக்கு செய்யக்கூடிய சேவைத் துறை என்பதால் இருப்பவற்றை எதையும் கலைக்க கூடாது என்ற எண்ணத்தில் உள்ளோம். திருச்சி என்றாலும் கும்பகோணம் என்றாலும் ஒன்றுதான். அதற்கான அலுவலகங்கள் அனைத்தும் செயல்பட்டு வருகிறது. இதனால் எந்த பாதிப்பும் இல்லை. திருச்சிக்கு என்ன தேவை இருக்கிறதோ அந்த தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

100 எலக்ட்ரிக் பேருந்துகள் வாங்குவதற்கு டெண்டர் நடைமுறையில் உள்ளது. விரைவில் டெண்டர் முடிந்த 100 பேருந்துகள் வந்த பிறகு மீதி 400 பேருந்துகள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மொத்தம் 500 எலக்ட்ரிக் பேருந்துகள் வாங்கப்பட உள்ளது.

20000 பேருந்துகள் இருக்கிறது. இதில் வாரம் ஒரு நாள் ஏதோ ஒரு இடத்தில் ஒரு பேருந்தில் டயர் கலந்தது பஞ்சர் ஆனது என்ற செய்தி சமூக வலைத்தளத்தில் வருகிறது. அதை பதிவு செய்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை நாம் சொந்த வாகனம் வைத்திருந்தாலும், நாம் போகும் போது திடீரென்று வாகனம் பழுது ஏற்படுவது தடுக்க முடியாத ஒன்றுதான். வாகனம் என்பது ஒரு இயந்திரம். அதனால் 20000 பேருந்துகள் இருக்கக்கூடிய இடத்தில் தொடர்ந்து பராமரிப்பு பணிகள் செய்யப்படுகிறது. அதைத் துறை சார்ந்த அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர் தொடர்ந்து நாங்கள் அறிவுரை வழங்கி வருகிறோம். பிரச்சனைகள் ஏற்படாதவாறு பேருந்துகள் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விபத்து நடப்பதில் முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்ற கேள்விக்கு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கூட்டம் நடத்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் சிறப்பான சாலைகள் இருக்கின்ற காரணத்தினால் புதிய தொழில்நுட்பத்துடன் புதிய வாகனங்கள் வந்து அதிக வேகத்தில் இயக்குவதால் சில இடங்களில் விபத்துக்கள் ஏற்படுகிறது. அதனை தடுக்க தமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கை மேற்கொள்வார்.

இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் பேட்டியில் கூறினார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், பாலேகுளி அருள்மிகு பெருமாள் திருக்கோயில் மற்றும் அருள்மிகு பட்டாளம்மன் திருக்கோயில் மற்றும் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், நாகமங்கலம், அருள்மிகு நீலகிரி அனுமந்தராய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சொந்தமான இடங்களை இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் சுதர்சன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினி செல்வம் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.



காங்கேயம், மீனாட்சி மஹாலில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காங்கேயம், வெள்ளகோவில், குண்டடம் ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள், ஊரக வீடுகள் பழுது பார்த்தல் திட்டப்பணி களுக்கான ஆணைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் பயனாளிகளுக்கு வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.ஈ.பிரகாஷ், மாவட்டக் கவுன்சிலர் கிருஷ்ணவேணி வரதராஜ், நகர கழக செயலாளர்கள் வசந்தம் ந.சேமலையப்பன், சபரி எஸ்முருகானந்தம், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.சந்திரசேகரன், சிவ.செந்தில்குமார், கே.கே.சிவானந்தம், கருணை பிரகாஷ், நகரத் துணைச் செயலாளர் சுப்பு உள்பட பலர் கலந்து கொண்டனர்.